Registered as a Newspaper

STAFF COPY
NOT FOR SALE

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# உதயன்

விலை: ரூ. 1-25

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞூ ஆனி மீ 22 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஃ பிறை 9 (06 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 189

மட்டக்களப்பு கள்ளிமடுவில்

# பக்தர்கள் மீது சூடு!

# 17பேர் அநியாயபலி!!

## சடலங்கள் எரிக்கப்பட்டன

கொழும்பு, ஜூலை 6

கடந்த சனிக்கிழமையன்று மட்டக்களப்பு, கள்ளிமடு பிள்ளையார் கோவில் திருவிழாவிற்குச் சென்றிருந்த பக்தர்கள் மீது அதிரடிப் பொலீஸார் கண்மூடித்தனமாகச் சுட்டதில் 17 தமிழர் இறந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டு எரிக்கப்பட்டன

பொதுமக்களே இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தனர்என்று மட்டக்களப்பு பிரசைகளை மேற்கோள்காட்டி பி.பி.சி நேற்றுக் காலை அறிவித்தது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டு எரிக்கப்பட்டன என்றும் அவ்வட்டாரங்களை மேற்கோள்காட்டி பி. பி. சி யின் கொழும்புச் செய்தியாளர் ஜோன் றெற்றி கூறியிருந்தார்.

ஆனால் இந்தச் செய்தியை அரசு தரப்பு வட்டாரங்கள் மறுத்துள்ளன.

அதேவேளை மட்டக்களப்பு நகரில் சனியன்று நடைபெற்ற சம்பவம் ஒன்றின் போது போராளிகள் மீது அதிரடிப்பொலீஸார் தாக்குதல் நடத்தியதாகவும் 5 போராளிகள் உயிரிழந்தனர் என்றும் கொழும்பு அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

போராளிகளுக்கும் அரசுப்படைகளுக்கும் நடந்த இம் மோதலில் ஒரு பொதுமகன் இடையில் அகப்பட்டு உயிரிழந்தார் என்றும் கொழும்பு அரசு வட்டாரம் மேலும் தெரிவித்தது.

முச்சந்தி முரளி



இன்னொரு சந்தர்ப்பம் குடுக்கப் போகினமாம். எங்கடை ஆக்கள் என்ன இளிச்சவாயர்களே... ...! உவையும் உவையின்ர தேர்தலும்......!!

மட்டக்களப்பு, நெல்லியடி

# மோதல்களில் 7 புலிகள் வீர மரணம்

## இராணுவத்திலும் பலர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 6

கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டம் தாண்டியடியிலுள்ள எமது முகாமை இராணுவத்தினர் சுற்றிவளைக்க முற்பட்டபோது எமக்கும் இராணுவத்துக்கும் இடையே கடுமையான மோதல் ஏற்பட்டது. இம்மோதலின் போது இராணுவ தரப்பில் பலர் கொல்லப்பட்டனர்.

எமது தரப்பில் எஸ். பி., லக்கி, சலீம், சின்னத்தம்பி, குஞ்சு பவான், ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

சனிக்கிழமை மாலை 5. 00 மணி அளவில் நெல்லியடியிலிருந்து உடுப்பிட்டி நோக்கி வந்து கொண்டிருந்த இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். எமது தரப்பில் கரன் – வல்வெட்டித்துறை, சேரன்– ஆரும் வாய்க்கால், கிளிநொச்சி ஆகியோர் வீர மரணமடைந்தனர். இவர்களுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

தூதுவர் மீது தாக்குதல்:

## பிரான்ஸ் அரசிடம் ஸ்ரீலங்கா ஆட்சேபம்

கொழும்பு, ஜூலை 6

பாரிஸ் நகரில் சுடந்த வாரம் ஸ்ரீலங்காத் தூதர் பந்துல சில்வா தமிழ் ஆர்ப்பாட்டக்காரர்களினால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று தொடர்பாக ஸ்ரீலங்கா, பிரான்ஸுக்கு ஆட்சேபம் தெரிவிக்கத் தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்காவுக்கு உதவும் நாடுகள் அமைப்பின் கூட்டம் ஒன்று நடந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றதாம்–

கூட்டத்துக்கு ஸ்ரீலங்கா நிதி அமைச்சர் ரோனி டி மெல்லுடன் தூதர் பந்துல சில்வா நடந்து சென்றுகொண்டிருந்தபோது ஆர்ப்பாட்டக்காரர்கள் திரு. பந்துல சில்வாவின் கண்ணாடியைப் பறித்து நிலத்தில் எறிந்தனர் என்றும், அவர் தூற்றப்பட்டார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காட்டிக் கொடுக்கும் நபர்களுக்கு மரணதண்டனை

### தெற்கில் ஜே. வி. பி. அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

காட்டிக்கொடுக்கும் துரோகிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படும்.

- இப்படி தடைசெய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி தென் இலங்கையில் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

பொதுமக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றின் மூலமே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

காட்டிக்கொடுத்ததற்காகச் சிலர் முன்னர் கொடுத்த 'நஷ்டஈட்டையே' இப்போதைய துரோகிகளும் கொடுக்க வேண்டும்.

'நாட்டு விசுவாசிகள்' பற்றித் தகவல்களைக் கொடுப்போர், அவர்களைக் கைது செய்ய வைப்போர்— ஆகியோருக்கு இந்த 'நஷ்டஈடு' தண்டனையைப்பெறுவர்.

இப்படி எச்சரிக்கைத் துண்டுப் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

(உ-எ)

## சென்.பற்றிக்ஸ் அகதி முகாமில் உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சென் பற்றிக்ஸ் கல்லூரி அகதி முகாமில் உள்ள 190 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 57 அகதிகளில் ஒரு பகுதியினருக்கு இந்திய நிவாரண உணவுப் பொருள்கள் நேற்று வழங்கப்பட்டன.

மற்றவர்களுக்குஇன்று வழங்கப்படும்.

இந்திய–இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் உணவு விநியோக வேலைகளை மேற்பார்வையிட்டனர்.

உணவு விநியோகத்துக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார். (இ–ள)

## 43 தமிழர் தடுத்து வைப்பு

கொழும்பு, ஜூலை 6

வியாழனன்று ஆஸ்திரேலியாவிற்குப் புறப்படவிருந்த 43 தமிழர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துத் தடுத்து வைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளூராட்சித் தேர்தல்:

## வடபகுதிக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பமாம்

கொழும்பு. ஜூலை 6

உள்ளூராட்சி, பிரதேச சபைகள் தேர்தலில் பங்குபற்றுவதற்கு வட. மாகாண மக்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படும் –

– இப்படி தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா தெரிவித்தார்.

இம் மாதம் 27ம் திகதி 28ஆம் திகதி வரை இச் சந்தர்ப்பம் வழங்கப்படக் கூடும் என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

அப்போதும் யாரும் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்ய முன்வராவிட்டால்... — இப்படி கொழும்புச் செய்தியாளர் ஒருவர் கேட்டார்.

'விஷயம் அத்துடன் சரி'–இப்படி சிரித்துக் கொண்டே பதிலளித்தார் தேர்தல் ஆணையாளர். (உ-எ)

## ஆஸ்திரேலிய வீரர் விம்பிள்டன் சாம்பியன்

விம்பிள்டன், ஜூலை 6

விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளில் ஆண்கள் ஒற்றையர்ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பற் காஷ் வெற்றிபெற்றுர்.

உலகின் முன்னணி ஆட்டக்காரர் இவான் லிண்டலை நேற்று ஆச்சரியப்படத்தக்க விதத்தில் தோற்கடித்து அவர் சாதனையைப் புரிந்திருக்கிறுர்.

நேரடி முதல் மூன்று நிலை ஆட்டங்களில் அவர் 7–6, 6–2, 7–5 என்ற கணக்கில் வெற்றி பெற்றுர்.

விம்பிள்டன் சாம்பியன் பட்டத்தைப்பெற்ற முதல் ஆஸி வீரர் பற் காஷே என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## வீடுகளைப் பார்க்க செல்வோரை இராணுவத்தினர் திருப்பி அனுப்புகின்றனர்

காங்கேசன்துறை, ஜூலை 6

மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளுக்குச் சென்று தமது வீடுகளைப் பார்வையிடுவதற்கு பொதுமக்களை அனுமதிப்பதை இராணுவம் குறைத்துக் கொண்டுள்ளதால் ஏராளமான மக்கள் அங்கு சென்று ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

கடந்த மாதம் 7 ஆம் திகதி இராணுவ நடவடிக்கையின் பின்னர் கடந்த 30ந் திகதியிலிருந்து சில தினங்களுக்கு அப்பகுதி மக்கள் தமது வீடுகளைச் சென்று பார்வையிட இராணுவம் அனுமதிவழங்கி வந்தது.

ஆனல் தற்போது இவ்

(4ஆம் பக்கம் பார்க்க)

# சிப்பாய்கள் - புலிகள் நவிண்டிலில் மோதல்

வடமராட்சி, ஜூலை 6

சனிக்கிழமை மாலை நவிண்டிலில்நடைபெற்ற புலிகள் – சிப்பாய்கள் நேரடி மோதலில் மூன்றுக்கு மேற்பட்ட சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பல சிப்பாய்கள் படுகாயமடைந்ததுடன், அவர்கள் வந்த கவசவாகனமும் சேதமாக்கப்பட்டது.

சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:–

சனி மாலை 6 மணி அளவில் நெல்லியடியிலிருந்து நூற்றுக் கணக்கான சிப்பாய்கள் கவசவாகனங்களுடன் உடுப்பிட்டி நோக்கிச் சென்றனர்.

வழியில் நவிண்டிலில் இவர்களை இடைமறித்த விடுதலைப் புலிகள் இவர்களுடன் நேரடிச் சமரில் இறங்கினர்.

இரண்டு மணி நேரம் நடைபெற்ற இச்சமரில் சிப்பாய்கள் மூவருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

பலர் படுகாயமடைந்தனர். இம் மோதலில் புலிகளின் தரப்பில் இருவர் உயிரிழந்தனர் என்று தெரியவருகின்றது.

சம்பவத்தைத் தொடர்ந்து நவிண்டில் வைரவர் கோவிலுக்கு அருகிலுள்ள பொதுமக்கள் பாதுகாப்புத்தேடி வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

## அச்சுவேலிப் பகுதி பாடசாலைகள் மீண்டும் இன்று முதல் இயங்கும்

பலாலி, ஜூலை 6

அண்மைக்காலச் சம்பவங்களால் இதுவரை மாணவர் வரவின்மையால் இயங்காதிருந்த அச்சுவேலி மகா வித்தியாலயம், அச்சுவேலி புனிததெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலிசரஸ்வதி வித்தியாலயம் ஆகியன இன்று முதல் மீண்டும் இயங்கவுள்ளதாக அப் பாடசாலைகளின் அதிபர்கள் தெரிவித்தனர்.

– பாடசாலைப் பிள்ளைகளுக்கு தகுந்த பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அச்சுவேலிப் பகுதி பிரசைகள் குழுவும், ஏனைய நலன்புரி ஸ்தாபனங்களும் தெரிவித்துள்ளன.

(உ–119)

# பாடசாலைகளில் அமைந்துள்ள முகாம்கள் தற்காலிகமானவை

வடமராட்சி, ஜூலை 6

வடமராட்சிப் பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் தற்காலிகமானவையே. அவை

**சுபநேரம்**

06–07–1987
திங்கட்கிழமை

சுபநேரம்:–
11.58 முதல் 1.28 வரை

ராகுகாலம்:–
7.28 முதல் 8.58 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## பிரிகேடியர் தகவல்

நிரந்தரமானவையல்ல.

இவ்வாறு வடமராட்சி சிவில் நிர்வாகப்பொறுப்பாளர் பிரிகேடியர் ரூபசிங்கா கூறினுர்.

பருத்தித்துறை புற்றளை மகாவித்தியாலயத்தில் – வடமராட்சி சிவில் பொறுப்பாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் பெற்றோர் சார்பில் திரு. ம. பொ. வீரவாகுவினல் கேட்கப்பட்டகேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

வடமராட்சி மக்கள் அறிவிலும், கல்வியிலும் உயர்ந்தவர்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகின்றேன்.

அப்படிப்பட்ட கல்விமான்களைப் பெற்றுத்தந்த வடமராட்சி மக்கள் இன்று சிவில் நிர்வாகத்தை இழந்து, பயங்கரவாதத்திற்கு அடிமையாகி, கல்வியையும் சிரழித்து நிற்பது துரதிஷ்ட வசமானதாகும்.

இவற்றைச் சீர்படுத்தவே மே 26 இல் 'ஒப்பரேஷன் லிபரேஷனை' நாம் எடுக்க வேண்டி ஏற்பட்டது.

இவற்றை நாம் அமுல் படுத்தவே பாடசாலைகளில் முகாம்களை அமைத்தோம்.

ஆனல் நாம் வடமராட்சி மக்களின் கல்வியைச் சிரழித்து செயல்படமாட்டோம். இப்போது நாம் முகாமிட்டுள்ள பாடசாலைகளைத் தற்காலிகமாகவே பயன்படுத்துகின்றோம். நாம் மேற்கொண்ட பணி எம

(4 ஆம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண

# இந்தியாவுடன் நல்லுறவு வளர்க்க வேண்டும்

## சிறிமா கூறுகிறுர்

கொழும்பு, ஜூலை 6

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முதலில் இந்தியாவுடன் நல்லுறவை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். யு.என்.பி. அரசு பதவியில் இருக்கும் வரை இது நடக்காது.

ஆகவே முதலில் யு. என். பி. அரசை வெளியேற்ற வேண்டும். அதற்குத் தேவை உடனே ஒரு பொதுத் தேர்தல்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'சண்டே ஐலண்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் திருமதி பண்டாரநாயக்கா இதனைத் தெரிவித்தார். பேட்டியின் முக்கிய பகுதிகள் வருமாறு;

கேள்வி: அயல் நாட்டு நல்லுறவைப் பேணுவது என்ற பெயரில் இந்திய நிவாரண உதவிகளை வருவதற்கு அனுமதி அளித்தது சரியான செயல் என்று ஏற்றுக் கொள்வீர்களா?

ஸ்ரீமாவோ: இது விஷயத்தில் நிலையான கொள்கை ஒன்றை அரசு கடைப்பிடித்திருக்க வேண்டும். அனுமதிக்க வேண்டும் என்று விரும்பி இருந்தால் ஆரம்பத்திலேயே அனுமதி வழங்கி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் மூவரை பிணையில் விடுவதற்கு லண்டன் நீதிமன்று மறுப்பு

லண்டன், ஜூலை 5

அரசியல் தஞ்சம் கோரிய மூன்று இலங்கைத் தமிழரை பிணையில் விடுதலை செய்ய லண்டன் நீதிமன்றம் ஒன்று மறுத்துவிட்டது.

பிரிட்டிஷ் குடிவரவுச் சட்டவிதிகளை மீறினுர்கள் என்ற குற்றச்சாட்டின் மீது மூன்று தமிழரும் லண்டன் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

ஸ்ரீலங்காவில் இடம்பெறும் மோதலால் அரசியல்தஞ்சம் கோர, லண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயகீதம் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ்சிறு ★
★ விளம்பரம் ★

**காணவில்லை**

671241282 V என்ற இலக்கமுடைய தேவராசா நவரத்தினராசா என்பவரின் அடையாள அட்டை இருபாலைக்கும் கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. அதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அச்சுவேலி தபாற்கந்தோரில் ஒப்படைக்கவும். அல்லது அனுப்பிவைக்கவும்.

### சேவைக் கால பயிற்சி வகுப்பு

வட்டுக்கோட்டை, ஜூலை 6

வட்டுக்கோட்டை வட்டாரத்திலுள்ள பாடசாலைகளில் ஆண்டு ஆறில் (ஆறும் ஆண்டில்) கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி இன்று நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணி அளவில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

விஞ்ஞானபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விஞ்ஞானபாட சேவைக் காலப்பயிற்சி 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி அளவில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறும். (இ-161)

### ஓராண்டு பூர்த்தி

மானிப்பாய், ஜூலை 6

இணுவில் பொதுநூல் நிலையத்தின் ஓராண்டு பூர்த்தி விழா இம்மாதம் 9 ஆம் திகதி நடைபெறும். இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபத்தில் மாலை 5 மணியளவில் விழா நடைபெறும். (இ-90)

### ஆயுதங்களை கோட்டைவிட்ட ஊர்காவலர்

ஊர்காவல் படையினரிடம் இருந்து ஐந்து துப்பாக்கிகள் இனந்தெரியாத நபர்களினால் அபகரித்துச் செல்லப்பட்டன.

குச்சவெளி 3 ஆம் குறிச்சியில் சென்ற 22 ஆம் திகதி இச் சம்பவம் இடம்பெற்றது.

சுமார் 30 பேர் கொண்ட ஆயுதம்தரித்த கோஷ்டி ஒன்று ஐந்து வீடுகளை இரவு நேரத்தில் சுற்றி வளைத்தது. அதன் பின்னர் துப்பாக்கிகளையும் 25 ரவைகளையும் கோஷ்டி அபகரித்துச் சென்றது. (உ-எ-150

# யாழ். அபிவிருத்திச் சபையின் வேலை சீமெந்தின்றி ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

காங்கேசன்துறைசீமெந்துத் தொழிற்சாலை மூடப்பட்டதால் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் அபிவிருத்தி வேலைகள் பல மேலும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

காங்கேசன் துறைப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளினால் சீமெந்துத் தொழிற்சாலைமூடப்பட்டுள்ளது.

இதனால் சீமெந்தின் விலை வெளிச் சந்தையில் சுமார் 50 ரூபாவினால் அதிகரித்துள்ளது.

விலை அதிகரிப்பால் கட்டிட ஒப்பந்தக்காரர்கள் கட்டட வேலைகளைப் பொறுப்பேற்கத் தயங்குகின்றனர்.

இதனால் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் கட்டட அபிவிருத்தி வேலைகள் பல ஸ்தம்பிதமடைந்துள்ளன.

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைக்கான இந்த வருடத்திற்குரிய முதல் தவணை நிதியும் தாமதமாகவே அரசால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இதனாலும் அரசின் திடீர் இராணுவ நடவடிக்கைகள், ஊரடங்கு உத்தரவுகளினாலும் சபையின் அபிவிருத்தி வேலைகள் தடைப்பட்டுள்ளன.

இதனால் பல அபிவிருத்தித் திட்டங்களில் முதற் கட்டட வேலைகள் முடிவடைய வேண்டிய இந் நிலையில், இன்னமும் வேலைகள் ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

—இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார். (உ-எ)

# உயிர்த் தியாகமே தியாகங்களில் சிறந்தது

## கந்தசாமி தினத்தில் உரை

வட்டுக்கோட்டை, ஜூலை 6

உயிர்த் தியாகமே தியாகத்தின் உச்சவரம்பாகும். இத்தியாகத்தைச் சாதனையில் காட்டி அமரத்துவம் அடைந்தவர் அமரர் கந்தசாமி.

வட்டுக்கோட்டை விளாத்தித் தோட்டத்தில் அமரர் கந்தசாமி நினைவுதின விழா நடைபெற்றது.

பிரதமபேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றிய சமாதான நீதிவான் திரு. கி. வைரமுத்து ஆசிரியர் மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு. கு. சிவசுப்பிரமணியம் தலைமையில் இவ் விழா நடைபெற்றது.

திரு. கே. கிருஷ்ண பிள்ளை உரையாற்றுகையில் 'ஏகாதிபத்திய முதலாளிகளை எதிர்த்து முதலாளிகளின் அரசியற் கேந்திர ஸ்தானமாகிய கொழும்பிலே உரிமை கோரி உயிர்த்தியாகம் செய்த அமரர் கந்தசாமி ஒரு சாதாரண தியாகியல்ல' என்றார்.

தலைமையுரை நிகழ்த்திய வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி முன்னாள் உப அதிபர் திரு. கு. சிவசுப்பிரமணியம் 'அமரர் கந்தசாமி இலங்கை வரலாற்றில் தியாகிகளின் வரிசையில் உழைப்பாளிகளின் உரிமைக்கு உழைத்த தொழிற்சங்கவாதிகளின் முன்னோடிகளில் ஒருவராக விளங்குகிறார்' என்றார்.

நன்றியுரை கூறிய திரு. இராமச்சந்திரா, 'கந்தசாமி' தினத்தைக் கொண்டாடுவதினால் கந்தசாமியின் தியாக வரலாற்று உணர்வூற்றை எம்முள் பாய்ச்சுகின்றோம்'' என்றார். (இ-161)

### வார்ட்டுகள் மீண்டும் திறக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். ஆஸ்பத்திரியில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மூடப்பட்டிருந்த வார்ட்டுகள் மீண்டும் திறக்கப்படுகின்றன.

இருபதிற்கும் அதிகமான வார்ட்டுகள் மூடப்பட்டிருந்தன.

இந்திய செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகள் யாழ் நகரில் தங்கி நிற்பதாலும் கோட்டையில் இருந்துமேற்கொள்ளப்பட்டு வந்த ஷெல் தாக்குதல்கள் குறைந்திருப்பதாலும் யாழ் ஆஸ்பத்திரிப் பகுதியில் பதற்றம் குறைந்து வருகிறது. (இ-10)

கஷ்டப்படும்

# மலையகத் தமிழருக்கும் இந்திய நிவாரணம் வழங்கக் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 4

பாஸ்போட் பெற்றும் இந்தியா செல்லமுடியாது கஷ்டப்படும் மலையகத் தமிழருக்கும் இந்திய நிவாரண உதவிகளை வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

—இப்படி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் துணைச் செயலாளர் திரு. டி. வி. சென்னன் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

பாஸ்போட் பெற்ற இந்தியத் தமிழர் இந்தியா செல்லமுடியாது கஷ்டப்படுகின்றனர். அவர்களுக்கு மலையகத்திலும் வேலை வழங்க மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் அன்றாட வாழ்க்கையை நடத்த அவர்கள் பெரும் கஷ்டப்படுகின்றனர்.

யாழ் தமிழருக்கு வழங்கப்படுவது போன்று இவ்வாறு கஷ்டப்படும் மலையகத் தமிழருக்கும் இந்தியா நிவாரண உதவிகளை வழங்க முன்வர வேண்டும்.

—இப்படி திரு. சென்னன் தனது வேண்டுகோளில் தெரிவித்து இருக்கிறார். (உ-எ)

# சாவகச்சேரியில் மேலும் 4 கொத்தணிகள்

சாவகச்சேரி, ஜூலை 6

சாவகச்சேரி கல்வி வட்டாரத்தில் இயங்கி வரும் உசன் கொத்தணி அமைப்பைவிட மேலும் ஐந்து கொத்தணி அமைப்புக்கள் விரைவில் பெரும்பாலும் இத்தவணையில் ஆரம்பமாகும் என வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா தெரிவித்தார்.

சாவகச்சேரி, மட்டுவில், கைதடி, கொடிகாமம், வரணி ஆகிய இந்த ஐந்து கொத்தணி அமைப்புக்களும் முறையே சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மட்டுவில் மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம் ஆகியவற்றை முன்னோடிப் பாடசாலையாகக் கொண்டு இயங்கும்.

ஒவ்வோர் அமைப்பிலும் குறைந்தது பத்துப் பாடசாலைகளாவது அங்கம் வகிக்கும் எனவும் தெரியவருகிறது. (உ.31)

மாறுவேடத்தில்

# போராளிகள் என்ற போர்வையில் ராணுவம்

## சங்குப்பிட்டியில் நடமாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

போராளிகள் என்ற போர்வையில் சாரம் சேட்டுடன் ஆயுதங்களை சாக்கால் மறைத்தபடி திரியும் இராணுவத்தினரின் நடமாட்டம் சங்குப்பிட்டி இறங்குதுறைப் பகுதியில் அதிகரித்துள்ளது.

இதனால் சங்குப்பிட்டி இறங்குதுறையைக் கடந்து செல்லும் மக்கள் மிகுந்த பயத்துடனேயே தங்களது பிரயாணத்தை மேற்கொள்கின்றனர்.

பூநகரி இராணுவ முகாமிலிருந்து அப்பகுதியூடாகச் செல்லும் அரச மற்றும் மினி பஸ்கள் மூலம் பயணம் செய்து இறங்குதுறையை அடையும் இராணுவத்தினர், அங்கு மக்களோடு மக்களாக நின்று போராளிகளைக் கைதுசெய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் சுமார் பத்து பேர்கொண்ட குழுக்களாக நின்று இம்முயற்சியில் ஈடுபட்டுவருகின்றனர். (உ)

### வளலாயில் சேதமான வீடுகள்

பலாலி, ஜூலை 6

வளலாய் மினி முகாம் அமைக்கப்பட்டதனால் முகாமைச் சுற்றிவரவுள்ள பல வீடுகள் எரிக்கப்பட்டும் உடைக்கப்பட்டும் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இதுவரை பதின்நான்கு வீடுகள் இவ்வாறு பெரும் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன.

இதுவரை உடைக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்களது பெயர்கள் வருமாறு:- சின்னவன் கணபதிப்பிள்ளை, சண்முகம் கிருஷ்ணபிள்ளை, சின்னவன் கந்தசாமி, பொன்னர் சின்னத்துரை, தம்பு மார்க்கண்டு, தம்பிமுத்து அருமைத்துரை, கணபதிமுத்து, சின்னத்துரை பாலசுப்பிரமணியம், பொன்னர் ஆறுமுகம், திரு. கந்தசாமி (துர்க்கா உரிமையாளர்) சதாசிவம் கந்தசாமி, [illegible] சின்னக்கண்டு, கணபதி சின்னக்கண்டு. (இ-119)

### நிதி ஒதுக்கீடு

யாழ் அபிவிருத்திச் சபையின்வரணி உபஅலுவலகத்தைச் சேர்ந்த பகுதிகளின் அபிவிருத்திப் பணியின் பொருட்டு ஒரு லட்சத்து அறுபத்தையாயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியின் ஒரு லட்சம் ரூபா வீதிகளின் புனரமைப்புக்கும் மிகுதி [illegible] பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-75)

# சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட இளைஞர்களையும் படையினர் விட்டுவைக்கவில்லை

திருகோணமலை, ஜூலை 6

தாக்குதல் காரணமாக சுவாசிக்கமுடியாமல் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இரண்டு தமிழ் இளைஞர்களை மீண்டும் இராணுவத்தினர் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

திருகோணமலை பிரசைகள் குழுவுக்கு முறையிடப்பட்டுள்ள இச் சம்பவம்பற்றி தெரியவருவதாவது;

கந்தளாயில் ஒரு வீட்டில் அந்தியட்டிக் கிரியைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. திடீரென்று அங்கு சென்ற ஆயுதப்படையினர் இரண்டு இளைஞர்களைக் கைதுசெய்தனர்.

முகாமுக்குக் கொண்டு சென்று விசாரணை செய்துவிட்டு மறுநாள் வீட்டில் கொண்டுபோய் விட்டனர் படையினர்.

இரண்டு இளைஞர்களும் சுவாசிக்க முடியாமல் கஷ்டப்பட்ட நிலையில் இருந்தனர்.

உறவினர்கள் இவர்கள் இருவரையும் திருகோணமலை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

திருகோணமலை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற இரண்டு பேரையும் பார்க்க உறவினர்கள் ஆஸ்பத்திரிக்குச் சென்றனர். இரண்டு பேரையும் காணவில்லை. உறவினர்கள் விசாரித்த போது ஆயுதப்படையினர் வந்து அழைத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டதாம்.

ஒருவர், இராமலிங்கம் ஆறுமுகம் (வயது 30), நான்கு குழந்தைகளுக்குத் தந்தை.

இரண்டாமவர் காத்தமுத்து தங்கராசா(வயது 30). (இ-எ-150)

# சிப்பாய்களைவிட சிறந்த பயிற்சி பெற்றிருக்கிறீர்

## தமிழ் இளைஞனைப் பார்த்து நீதிபதி

கொழும்பு, ஜூலை 6

'ஸ்ரீலங்கா இராணுவத்தினரை விட இந்தியாவில் திறமையான பயிற்சி பெற்று இருக்கின்றீர்'.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவரைப் பார்த்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எச். டபிள்யு. சேனநாயகா மேற்கண்டவாறு சொன்னார்.

அளவெட்டி வடக்கு அம்பாள் கோவிலடியைச் சேர்ந்த பாலசிங்கம்பாலராஜா(வயது20) என்ற இளைஞரைப் பார்த்தே நீதிபதி இப்படிச் சொன்னார்.

போராளிகள் பற்றி பொலீஸாருக்கு தகவல் வெளியிட மறுத்த குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரிக்கு மூன்றரை வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. (இ-எ)

முஸ்லிம் அமைப்புச் செயலாளர் கேட்கிறார்

# வடக்கு, கிழக்கு மக்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கும்போது தேர்தலும் தேவையா?

கல்முனை, ஜூலை 6

''நாடும் மக்களும் நடுத்தெருவில் அவதிக்குள்ளாகி நாடற்ற பிரஜைகள் போல் அல்லலுறும் போது சர்வாதிகாரப் போக்கில், எதேச்சாதிகார முறையில் அரசாங்கம், இந்த நாட்டில் ஒரு புதிய குட்டிப் பிரதேசசபைத் தேர்தல் முறையை திடீர் எனக் கொண்டுவந்துள்ளது.

வடக்கு, கிழக்கு மக்கள் இரத்தக்கண்ணீர் வடிக்கும் போது தேர்தல் ஒரு கேடா?

இலங்கையிலிருக்கும் அனைத்து எதிர்க்கட்சிகளும் இந்தத் தேர்தலைப் பகிஷ்கரித்துள்ளன.

எனவே தேர்தலை நிறுத்தி இலங்கையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையை மாற்றி நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துமாறு அரசைக் கேட்கின்றேன்''

அகில இலங்கை தமிழர்-முஸ்லிம் அமைப்பு பொதுச் செயலாளர் ஜனாப். எம். எச். ராஜா முகம்மது வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு கேட்கப் பட்டிருக்கிறது.

''சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களே சற்று சிந்தித்துப் பாருங்கள்!

வடக்கிலும், கிழக்கிலும் பொதுமக்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகி இருக்கின்றனர். இப்பகுதிகள் பயங்கரவாதப் பிரதேசங்கள் என அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது. இதனால் இப்பகுதிகளின் மக்கள் இரத்தக்கண்ணீர் வடிக்கின்றனர். இடம் விட்டு இடம் பெயர்ந்து அகதிகளாக இருக்கின்றனர்.

இவைகளை இலங்கை அரசு கண்ணெடுத்தும் கூடப் பார்க்காமல் தேர்தலை நடத்த முயற்சித்து அதன் மூலம் நாட்டு மக்களையும், வெளிநாடுகளையும் ஏமாற்ற முனைகின்றது.

முஸ்லிம் பொதுமக்களே! நமது வீட்டிற்கு அருகாமையில் உள்ள உங்கள் சகோதரனின் வீடொன்றில் மையத்து இருக்கும் போது உங்கள் வீட்டில் கலியாணம் நடத்துவதா? உங்களுக்கு கருணையுள்ளம் இல்லையா? — இப்படி அந்த அறிக்கையில் கேட்கப்பட்டிருக்கிறது. (உ-84)

**செய்திச் சாரம்**

### பகிஷ்கரிப்போர் சம்பளத்தை நிறுத்த கோரிக்கை

கொழும்பு, ஜூலை 6

நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவோருக்கு சம்பளம் வழங்குவதை நிறுத்த வேண்டும்.

— இப்படி ஐ. தே. க. காரியக்கமிட்டி தீர்மானம் எடுத்து உள்ளது.

எதிர்க்கட்சிகள் பொதுத்தேர்தல் கோரிக்கையை முன்வைத்து நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாக அறிவித்திருக்கின்றன அல்லவா!

அது குறித்தே ஐ. தே. க. இத் தீர்மானத்தை நிறைவேற்றி அமைச்சரவையின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்துள்ளது.

செவ்வாய்க்கிழமை கமிட்டிக் கூட்டம் நடந்தது. (இ-எ)

### வீடமைக்கும் போட்டியில் வெற்றி

நெடுங்கேணி, ஜூலை 6

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிராமோதய சபை மட்டத்தில் நடைபெற்ற குறைந்த செலவில் வீடமைக்கும் போட்டியில் நெடுங்கேணியைச் சேர்ந்த திருமதி பஞ்சலிங்கம் ஞானமிர்தம் முதலாம் இடத்தைப் பெற்றார். (உ)

### தீவிர ஆங்கில பயிற்சி வகுப்பு

கொழும்பு, ஜூலை6

பல்கலைக் கழக மாணவருக்கு தீவிர ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்கள் செப்டம்பரில் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள், அல்லது அவற்றுக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் இந்த வகுப்புக்கள் நடைபெறும்.

—இப்படி பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் டாக்டர் ஸ்டான்லி கல்பகே அறிவித்தார்.

கடந்த மே மாதம் ஆரம்பமான பொது ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்கள் இம்மாதத்துடன் முடிவடைய இருந்தன. ஆனால் இப்போது அடுத்த மாதம் வரை அவை நீடிக்கப்பட்டுள்ளன. (உ-எ)

### மின்கம்பத் தண்டனை

திருகோணமலை, ஜூலை 6

நிலாவெளி 6 ஆம் கட்டையைச் சேர்ந்த அல்பட் மகேஸ்வரி (வயது 32) என்ற பெண்மணிக்கு அண்மையில் மின்கம்ப மரண தண்டனை வழங்கப்பட்டது.

தகவல் கொடுப்பவர் என்று கருதியே இவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டது. (உ-31)

# அனுபவம் மிக்கவர் ஓய்வு பெறுவது பேரிழப்பு

மானிப்பாய், ஜூலை 6

துன்பம் நிறைந்த இன்றைய கால கட்டத்தில் மாணவர்களை நன்நெறிப் படுத்தும் - அனுபவம் மிக்க ஆசிரியர்கள் தம் சேவையில் இருந்து ஓய்வு பெறுவது மாணவ சமுதாயத்திற்கும் கல்வி உலகிற்கும் பேரிழப்பாகும்.

நாவலி மகாவித்தியாலயத்தில் பதினெட்டு ஆண்டுகள் ஆசிரியராக, உப அதிபராக, பதில் அதிபராககடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள திரு. பொ. தி. சம்பந்தபிள்ளை அவர்களுக்கு. மாணவர்கள்,ஆசிரியர்கள்அபிவிருத்திசங்கத்தினர்இணைந்து நடாத்திய பிரிவுபசார விழாவிற்கு தலைமை வகித்து உரையாற்றிய வித்தியாலய அதிபர் திரு. செ. கதிர்காமத் தம்பிஇவ்வாறு கூறினார்

பாடசாலை சேவையிலிருந்து தான் ஆசிரியர்கள் ஓய்வு பெறுகின்றார்கள். ஆனால் சமுதாயத்தின் வழிகாட்டலுக்கும் முன்னேற்றத்துக்கும் அதன் பின்னர் அவர்களின் சேவை முழுமையாக கிடைக்கின்றது என அதிபர்திரு.கதிர்காமத்தம்பி மேலும் கூறினார்.

பாடசாலைஅபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் பாராட்டுப் பத்திரம் வாசித்து வழங்கப்பட்டது.

ஆசிரியர் திரு. செல்லத்துரை பெற்றார் சார்பில் திரு. இராசையாவும் பாராட்டுரை நிகழ்த்தினர். (உ-90)

### அச்சியல் அதிசயம் விவரண நிகழ்ச்சி ஒளிபரப்பு இன்று

கொழும்பு, ஜூலை 6

கரவெட்டி எம். வரதராஜன் தயாரித்த 'அச்சியல் அதிசயம்'என்றபுதிர் விவரணச் சித்திரம் ரூபவாஹினியின் இன்றைய சேவையில் மாலை 5 30 மணிக்கு ஒளிபரப்பாகும்.

அச்சியல் மற்றும் பத்திரிகை அச்சிடுதல் போன்ற விடயங்கள் இவ்விவரண நிகழ்ச்சியில் விளக்கப்பட்டிருக்கின்றன.

இந்த விவரணத்துக்குரிய பிரதியை 'டெய்லி நியூஸ்' ஆசிரியபீடத்தைச் சேர்ந்த திரு கே. சபாரத்தினம் எழுதியுள்ளார். (உ)

# கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் ஜே. வி. பி?

## ஊடுருவல் குறித்து கண்காணிப்பு

மட்டக்களப்பு,ஜூலை6

கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம் பகுதிகளில் ஜே. வி. பி. யின் ஊடுருவல் குறித்தும் ஆயுதப்படையினர் கவனம் செலுத்திவருகிறார்கள்.

ஜே. வி. பி. ஆதரவாளர்கள் எனக் கருதப்படுவோர் சிலர் ஏற்கனவே படையினரால் விசாரிக்கப்பட்டு பின்பு விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கிராமமொன்றில் ஜே. வி. பியின் கருத்தரங்கு ஒன்றும் அண்மையில் நடைபெற்றதாகவும் ஆயுதப் படையினருக்கு தகவல் கிடைத்துள்ளதாம். (உ-21)

# புல்லுமலைக்கு திரும்புகிறார்கள் தமிழ் அகதிகள்

மட்டக்களப்பு,ஜூலை6

மட்டக்களப்பு புல்லுமலை கிராமத்திலிருந்து வெளியேறி கடந்த 10 மாதங்களாக அகதிகள் முகாம்களில் தங்கியிருந்த 325 தமிழ் குடும்பங்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குதிரும்பிக் கொண்டிருக்கின்றன.

புல்லுமலையில் இராணுவம் வாபஸ்பெறப்பட்டு விஷேட அதிரடிப் படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இணைப்பதிகாரி திரு. நிமால் சில்வாவினால் வழங்கப்பட்ட பாதுகாப்பு உத்தரவாதத்தையடுத்தே அந்த அகதிகள் திரும்பிச் செல்ல இணக்கம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி அகதிகள் குடும்பமொன்றுக்கு தலா 2 ஆயிரம் ரூபா பணமும் இருவார கால பங்கீட்டு உணவும் நிவாரணமாக வழங்கப்படுகிறது. (உ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

மலிவு என்பதற்காக உனக்கு வேண்டாததை வாங்காதே.

— ஜெபர்ஸன்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
06.7.1987 த.பெ.இல: – 23


## சித்திரவதைத் தடுப்பு

பாணந்துறையைச் சேர்ந்த ஒருவர் தொடர்ந்த மனித உரிமை மீறல் வழக்கில் உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பும், உத்தரவும் கவனத்தில் கொள்ள வேண்டியவை.

பொலீஸ் பாதுகாப்பில் இருந்த வேளை தன்னை மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதை செய்து, தனது அடிப்படை உரிமைகளை பொலீஸார் மீறியதாக மனுதார் அரசுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருந்தார்.

சித்திரவதை செய்யப்பட்டது நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு நஷ்ட ஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது. அது மட்டுமன்றி சம்பந்தப்பட்ட பொலீஸார் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொலீஸ் மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதியரசர்குழு தெரிவித்த கருத்துக்கள் உண்மை நிலையைப் பிரதிபலிக்கின்றன.

பாதுகாப்பில் உள்ள சந்தேக நபர்கள் மீது பொலீஸார் சித்திரவதை புரிகின்றனர். இது கவலையைத் தருகிறது. இப்படியான செயல்கள் காட்டுமிராண்டித் தனமானவை; மனிதத் தன்மையற்றவை— இவ்வாறு நீதியரசர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

சட்டத்தின் பாதுகாவலர்களாகவும், சட்டத்தைச் சரிவர நடைமுறைப்படுத்துபவர்களாகவும் விளங்க வேண்டியவர்கள் பொலீஸார். ஆனால் அவர்கள் தமது பாதுகாப்பில் ஒப்படைக்கப்படும் சந்தேக நபர்களைச் சித்திரவதை செய்கிறார்கள். மனித உரிமைகளை மீறும் கொடிய குற்றத்தைப் புரிகிறார்கள். விசாரணை, உண்மையை அறிந்து கொள்ளுதல் என்ற போர்வையில் காட்டுமிராண்டித் தனமாக நடந்து கொள்கிறார்கள். ஆனால் தங்கள் மனிதாபிமானமற்ற செயல்களை, குற்றங்களை வெளியில் காட்டிக் கொள்ளாது உத்தியோக பூர்வமாகவே மறைத்து விடுகிறார்கள்.

ஆயிரத்தில் ஒருவர் சித்திரவதைகள் குறித்து நீதிமன்றம் எடுத்துச் செல்லும்போது தான் பொலீஸாரின் அட்டூழியம் வெளிச்சத்துக்கு வருகிறது.

சட்டத்தின் பாதுகாவலர்களே, மனித அடிப்படை உரிமைகளை மீறும் குற்றத்தைப் புரிகிறார்கள்! ஆனால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. அவர்கள் தண்டனையிலிருந்து தப்பி விடுகிறார்கள். அதனால் மீண்டும் மீண்டும் அதே குற்றத்தைப் புரிகிறார்கள்.

இராணுவத் தடுப்பு முகாம்களில் பொதுவாகத் தமிழர்களும் குறிப்பாக தமிழ் இளைஞர்கள், யுவதிகளும் அனுபவிக்கும் சித்திரவதைகள், பொலீஸாரின் சித்திரவதைகளை விட ஆயிரம் ஆயிரம் மடங்கு பயங்கரமானவை, கொடுமையானவை; நிட்டூரமானவை; காட்டுமிராண்டித் தனமானவை. நெஞ்சால் நினைத்துப் பார்க்கவும் முடியாதவை.

சர்வதேச மன்னிப்புச்சபை ஆகப் பிந்தி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் சித்திரவதைகளைப் படிக்கவே நெஞ்சு வெடிக்கிறது. (அறிக்கை விவரம் உதயனில் தொடர்ந்து வெளியிடப்படுகிறது) 55 வயதான முதியவரைக் கூட படையினர் பயங்கரமான முறையில் சித்திரவதை செய்திருக்கிறார்கள். இளைஞர்கள், யுவதிகளை விட்டா வைப்பார்கள்?

சொல்லவும் வாய் கூசும் மிருகத்தனமான சித்திரவதைகளைப் புரிந்துவிட்டுப் படை அதிகாரிகள் சட்டத்தின் போர்வைக்குள்ளேயே புகுந்து தப்பி விடுகிறார்கள், அரசாங்கமும் அதற்கு உடந்தையாக இருந்துகொண்டு அப்படி எதுவும் நடப்பதில்லை என்று மூடிமறைக்கிறது.

சாதாரண பொலீஸ் பாதுகாப்பில் உள்ளவர்கள் சித்திரவதைக்கு ஆளாக்கப்படுவதை நிறுத்த விரும்பாத ஸ்ரீலங்கா அரசாங்கமா, தமிழ் இளைஞர்களுக்குச் சித்திரவதையிலிருந்து மீட்சி அளிக்கப்போகிறது?

எனவே சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவதில் அக்கறையுள்ள இயக்கங்கள் சித்திரவதைக்கு ஆளான இரண்டொரு தமிழ் இளைஞர்கள் விடயத்தையாவது சர்வதேச நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்று ஸ்ரீலங்கா அரசின் காட்டுமிராண்டித் தனத்தை அம்பலப்படுத்த வேண்டும்.

'சாம்பிளு'க்கு இரண்டொருவர் விஷயம் நிரூபிக்கப்பட்டுவிட்டால், சர்வதேச இழுக்குக் கருதியேனும், ரோசத்திலேனும் சித்திரவதைகளை நிறுத்துகிறதா என்று பரீட்சித்துப் பார்க்கலாம்.

மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியவர்களே நீதிக்கு முரணாக நடக்கும்போது அவர்களைத் தண்டிக்க வேண்டியது அரசினதும் நீதித்துறையினதும் கடமையாகும்.

# ஸயரில் ரயில் விபத்து

## 143பேர்பலி!

ஸயர், ஜூலை 5

ஆபிரிக்க நாடான ஸயரில் கடந்த வியாழன் இடம்பெற்ற கோர ரயில் விபத்தில் 143 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

சரக்குகளுடன் சென்ற ட்ரக் ஒன்று ரயில் கடவையில், பயணிகள் ரயில் ஒன்றுடன்மோதிய போது, இவ்விபத்து ஏற்பட்டது.

மோதிய ட்ரக்கில் சென்ற இராணுவ அதிகாரி ஒருவர் தகவல் தெரிவிக்கையில்–

ட்ரக் அவ்வளவு வேகமாகச் சென்றதினால் ரயில்வரும் சத்தம் எனக்குக் கேட்கவில்லை.

ரயில் வருவதை இருபது யார் தூரத்தில் வைத்துத் தான் ட்ரக் சாரதி கண்டார்.

ட்ரக்கை நிறுத்தமுடியவில்லை. ரயிலின் முதலாவது பெட்டி மீது ட்ரக் மோதியது. இதனால் ரயில் தடம் புரண்டது– என்று சொன்னார்.

வியாழக்கிழமை இந்த விபத்து நடைபெற்ற போதும் நேற்றுத் தான் சர்வதேச செய்தி நிறுவனங்களுக்கு இந்த செய்தி எட்டியது. (உ-எ)

## தமிழருக்கு உலக விருது

மணிலா, ஜூலை 5

சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிலைய தலைமை இயக்குநரான டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் உலக உணவு பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றார்.

தமிழரான டாக்டர் சுவாமிநாதனுக்கு இப் பரிசாக 2 லட்சம் அமெரிக்க டாலர் பணமும் நற்சாட்சிப் பத்திரமும் கிடைக்கும்.

பரிசு வழங்கும் வைபவம் எதிர்வரும் அக்டோபர் மாதம் வாஷிங்டனில் நடைபெறும்.

உலக உணவு பரிசுத் திட்டம் தொடங்கப்பட்ட பின்னர் முதலாவது பரிசைப் பெறும் பெருமைடாக்டர்சுவாமிநாதனுக்குக் கிடைத்துள்ளது.

இவர் ஏற்கனவே மகஸேஸே விருது உட்பட பல பரிசுகளை உணவு உற்பத்தியில் சேவையாற்றியதற்காகப் பெற்றிருக்கின்றார். (உ–எ)

## வெளி உலகில்

வளைகுடாப் பிரச்சினை:

## ரஷ்ய யோசனையை ஈரான் வரவேற்கிறது

தெஹ்ரான், ஜூலை 5

வல்லரசுகளின் யுத்தக் கப்பல்கள் வளைகுடாவை விட்டு வெளியேற வேண்டும் என்ற சோவியத் யூனியனின் யோசனையை ஈரான் வரவேற்றுள்ளது.

வளைகுடா பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் யுத்தக் கப்பல்களைத் தவிர வேறு நாடுகளின் கப்பல்கள் வளைகுடாவில் இருந்து வெளியேற வேண்டும் என்று சோவியத் யூனியன் யோசனை தெரிவித்துள்ளது தெரிந்ததே. (உ–எ)

## ஈழத்தமிழரை காப்பாற்ற கோரிக்கை

சென்னை, ஜூலை 5

உணவு வழங்குவதுடன் நில்லாது இராணுவத் தாக்குதலில் இருந்தும் இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி, தமிழ் நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் ப. நெடுமாறன் ஆகியோர் கூட்டாக விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (உ–எ)

## இந்திய மீனவரை விடுவிக்க முயற்சி

சென்னை, ஜூலை 5

ஸ்ரீலங்கா கடற்படையினரின் பாதுகாப்பில் இருக்கும் ஏழு இந்திய மீனவர்களைத் திருப்பி அழைப்பதற்காக கொழும்பில் அரசு அதிகாரிகளுடன் இந்தியா தொடர்பு கொண்டுள்ளது.

முன்னர் இம் மீனவர்கள் காணாமற் போனார்கள் என்று கருதப்பட்டது.

பின்னர் தான் அவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரின் பாதுகாப்பில் இருப்பது தெரிய வந்தது. (இ–எ)

எம். பியானவுடன்

## வாக்குறுதியை மீறிய கவர்ச்சி நடிகை!

ரோம், ஜூலை 5

இத்தாலியின் கவர்ச்சி நடிகையான எம். பி. இலோனா ஸ்டோலர் நாடாளுமன்றத்துக்குமுதல் தடவையாக கடந்த வியாழன் சென்றார்.

கௌரவமான உடையுடன் அவர் சென்றார்.

மேலாடை இன்றி நாடாளுமன்றம் செல்வேன் என்று இவர் முன்னர் கூறியிருந்தார்.

நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் இலோனா ஸ்டோலர் சொன்னதாவது;

மார்பைக் காட்டும் கண்ணாடி உடையுடன் தான் நாடாளுமன்றம் செல்லத் தீர்மானித்து இருந்தேன்.

ஆனால் அடக்கம், நாணம் என்னை அத்திட்டத்தைக் கைவிட வைத்தது.

— இப்படிச் சொன்னார், ஆபாசப்படங்களில் நடித்துப் புகழ்பெற்ற கவர்ச்சி எம்.பி

அவரின் ரசிகர்களோ கொடுத்த வாக்குறுதியை அவர் மீறிவிட்டார் என்று ஏமாற்றம் தெரிவித்து இருக்கின்றனர். (உ–எ)

## பார்பிக்கு ஆயுள்சிறை

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் மனித இனத்துக்கு எதிரான கொடுமைகளைப் புரிந்ததற்காக சர்வாதிகாரி ஹிட்லரின் கெஸ்டபோ இராணுவ அதிகாரி பார்பி என்பவருக்கு சனி அன்று ஆயுள்கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பிரெஞ்சு நீதிமன்றம் ஒன்றில் 73 வயதான பார்பிக்கு எதிராக கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்றுவந்த விசாரணை நேற்று முடிவடைந்தது.

பார்பி மீது 14 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

ஏப்ரல் 1966 ஆம் ஆண்டு யூதர் இனத்தைச் சேர்ந்த 13 வயதுக்குட்பட்ட 44 குழந்தைகளை கொலை செய்வதற்காக நச்சுவாயு அறைக்குள் அனுப்பியது—அக்குற்றச் சாட்டுக்களில் ஒன்று. (உ-எ)

## ஈரான் தயார்!

வளைகுடாவில் வல்லரசுகளின் பயமுறுத்தலைச் சமாளிக்க ஈரான தயாராக உள்ளது.

ஈரான் ஜனாதிபதி அலி கொமேனி ஈரான் பல்கலைக்கழக மாணவர் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏகாதிபத்திய வாதிகளின் பயமுறுத்தலை வளைகுடாவில் சமாளிக்கக்கூடிய ஏவுகணைப் பலம் ஈரானிடம் உண்டு என்றும் ஜனாதிபதி கொமேனி தெரிவித்தார். (உ–எ)

## வித்தாரம்

மூளியார் வந்தாச்சுப் போல.

எங்கே புறப்பட்டு விட்டீர்? படம் பாத்துக் கனநாளாய்ப் போச்சு, மினிசினிமாவுக்குப் போற யோசனையோ? ஏன், வீட்டிலே ரி. வி. இருக்கு ஒருடெக்கை வாடகைக்கு எடுத்து விடியோவையும் வாங்கி வீட்டிலே இருந்த இரையிலே பாக்கலாமே!

நாடு எப்பாடு பட்டால் என்ன, சனம் எக்கேடு கெட்டால் என்ன எண்டு, சில பேர் பகலெண்டும் இரவெண்டும் பாராமல் ரி. விக்கு முன்னாலே தானே காலத்தைக் கழிக்கினம்! மனம் சலிப்பாய் இருக்கையிக்கை அல்லது பயமாய் இருக்கையிக்கை பொழுது போக்கு அதை மறக்க உதவும் தான். அதுக்காக சதா ரி. வி. க்கு முன்னாலே இருக்கிறதே?

அது சரி, மாஸ்கோவிலே நடந்து கொண்டிருக்கிற இந்திய விழா ஆரம்பத்தை ரி. வியிலே காட்டிச்சினம்பாத்தியே?

மாஸ்கோவிலேயும் தமிழ்ப் பண்பாடும் கலையும் மேலோங்கி நிண்டதைப் பாக்க பெரிய சந்தோஷமாய் இருந்திது. இஞ்சை தமிழன் செத்துக் கொண்டிருந்தாலும் ரஷ்யாவிலே நாதஸ்வரம் மங்கள இசை முழங்க விழா ஆரம்பிச்சதைப் பாக்க கலாதியாய் இருந்திது. தமிழன்ரை கலை அந்த விழாவுக்கு மெல்லிய பூங்காற்றுப் போலே இதம் சேத்திது. கும்பம் வைச்சு விழாத் துடங்கினதைப் பாக்க, ஒரே பூரிப்பு.

அது மட்டுமே எம். எஸ். எஸ் சிவதோத்திரம் பாடினதும் கேட்கப் பரவசமாய் இருந்தது. ஒரு கணம் மெய்சிலிர்த்து நிக்கிற இன்பம்.

மாஸ்கோவாலே புதுடில்லி திரும்பியவுடனை ராஜீவ் பத்திரிகைக்காறரோடை கதைக்கயிக்கை இந்தியா ரஷ்யாவின் பக்கம் சாய்ந்துவிட்டதாகச் சொல்லுறது தவறு எண்டார். ஆத்மாத்தமான, அன்னியோன்னியமான நட்புத்தான் இரண்டு நாடுகளுக்கு இடையிலும் நிலவுவதாகசொன்னார்

எண்டாலும் ரஷ்யா இந்தியாவுக்குக் குடுக்கிற மதிப்பும் மரியாதையும் எக்கச்சக்கம், வெளிநாட்டு நிகழ்ச்சி எதுவும் இதுவரை கிரெம்ளினிலை நடந்ததில்லை. அந்த நாட்டிலே நடக்கிற நிகழ்ச்சி எதுவும் உப்பிடி அம்பலமாய் எல்லா நாடுகளுக்கும் காட்டப்படுவதில்லை. இந்திய விழா எண்டதும் எல்லாம் தாராளம்.

அதுமட்டுமே இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டிருந்த ராஜீவோடு ரஷ்யத் தலைவர் கோர்பச்சேவ் கூடுதல் நேரத்தைச் செலவழிச்சார். குறுகிய விஜயம் மேற்கொண்ட வெளிநாட்டுத் தலைவர் எவரோடும் தான் இந்தளவு நீண்டநேரம் செலவழிச்சதில்லை எண்டு கோர்பச்சேவே பத்திரிகையாளர் ஒருவரிட்டை சொன்னார்.

உந்த இந்திய விழா மாஸ்கோவிலே ஒரு வருஷத்துக்கு நடக்கப் போகுது. 3,000 இந்தியக் கலைஞர்கள் ரஷ்யாவில் உள்ள எல்லா நகரங்களுக்கும் போய் கலை நிகழ்ச்சிகளை நடத்தப் போகினம்.

எங்கடை கலைஞர்மாருக்கு எங்கடை ஊரிலேயே தங்கடை நிகழ்ச்சிகளை நடத்த முடியாமல் இருக்கு. கோயில் குளங்களிலே நடந்து வந்த நாதஸ்வரம், நாடகம், வில்லுப் பாட்டுக்கூட நடக்கமுடியாத நிலை.

பூஸா முகாம் சித்திரவதைகள்:

# சுகாதாரச் சீர்கேடுகளினால் தொற்றுநோய்

## கைதிகள்பெரும்அவதி

பூஸா இராணுவ முகாமில்இடம்பெறும் சித்திரவதை, துன்புறுத்தல் மற்றும் சீர்கேடுகள் பற்றி சர்வதேச மன்னிப்புச்சபை ஆறுபக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன் ஆறுவது பகுதி இன்று பிரசுரமாகின்றது.

### தொற்றுநோய்

குடல்நோவு, வயிற்றுப்போக்கு, சொறி சிரங்கு முதலியவற்றினால் அவஸ்தைப்படுவதாகவும் வேறு சிலர் முறையிட்டிருக்கின்றனர்.

பூஸா முகாம் கைதிகள் தொற்றுநோயினால் அவஸ்தைப்படுவது சர்வசாதாரண விஷயம்.

'பொக்குளிப்பான், சின்னம்மை, கூகைக்கட்டு, காய்ச்சல், வயிற்றுப்போக்கு, விதைகள் வீக்கம் ஆகியன பொதுவாக பூஸா முகாமில் காணப்படுகின்றன'—

இப்படி விடுதலையான அந்த நபர் சொன்னார்.

தண்ணீர்த் தட்டுப்பாடுதான் சுகாதாரச் சீர்கேட்டுக்கும் சில நோய்கள் பரவுவதற்கும் உரிய முக்கிய காரணமாகும்.

முகாமில் உள்ள இராணுவத்தினருக்கு தனியான தண்ணீர் விநியோகத்திட்டம் உண்டு.

தடுப்புக்காவல் கைதிகளுக்கு வார்ட்டுக்களில் உள்ள குழாய்கள்மூலம் பகலில் இரண்டு மணி நேரம் தண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது. காலையில் ஒரு மணித்தியாலம்; நண்பகலில் அரை மணித்தியாலம்; மாலையில் அரை மணித்தியாலம் — இப்படித்தான் தண்ணீர் விநியோகம் நடைபெறுகின்றது.

குறிப்பிட்ட நேரங்களில் தண்ணீரைச் சேகரித்து வைத்து தண்ணீர் விநியோகம் இல்லாத நேரத்தில், தேவைப்படும்போது பயன்படுத்தக்கூடியதாக கைதிகளுக்கு வாளியோ அல்லது வேறு பாளை வசதிகளோ வழங்கப்படுவதில்லை.

தண்ணீர் பற்றுக்குறை அதிகமாக உள்ள சில வார்ட்டுகளுக்கு கிணற்றில் இருந்து தண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது.

ஆனால் அந்தக் கிணறு மலசல கூடத்துக்கு அருகே, அல்லது முன்னர் மலசல கூடக்குழியாக இருந்த இடத்தில் தோண்டப்பட்டதாக இருக்கும்.

தண்ணீர் விநியோகம் போதாமல் இருக்கும் சமயம் கைதிகள் குடிப்பதற்கும் கழுவுவதற்கும் துப்புரவற்ற கிணற்று நீரைத்தான் பயன்படுத்துவர்.

சிரங்கு மற்றும் தோல் நோய்கள் கைதிகள் மத்தியில் பரவலாகக் காணப்படுகின்றன. சில தகவல்களின்படி 90 சதவீதமான கைதிகள் இப்படிப் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

**4. பற்றுக்குறையான உணவு விநியோகம், வைத்திய பராமரிப்பு:**

பூஸா முகாமில் ஒரு நாளைக்கு மூன்றுவேளை உணவு வழங்கப்படுகிறது.

**காலை உணவு:**

5 அவுன்ஸ் பாண், ஒன்று அல்லது இரண்டு மேசைக்கரண்டி தேங்காய்ப்பால் சொதி, அரைக்கோப்பை தேநீர், தண்ணீர்.

**மதிய உணவு:**

ஐந்து அவுன்ஸ்சோறு, மீன் அல்லது இறைச்சிக் கறி.

**இரவு உணவு:**

மதிய உணவு போன்றது. (சோற்றில்) புழுக்களும் வண்டுகளும் நிறைந்து காணப்படும் என்று கைதிகள் முறையிடுகின்றனர்.

அழுகிய மரக்கறி, இறைச்சி, மீன் ஆகியவற்றுடன் வண்டுகள், புழுக்களும் சேர்த்துத்தான் பரிமாறப்படுகின்றன என்றும் முறையிடப்படுகின்றது.

1985–1986 இல் பூஸாவில் இருந்து விடுவிக்கப்பட்ட ஒரு கைதி சொல்கின்றார்.

'ஊட்டச் சத்தற்ற, குறைவான உணவு, ஒழுங்கற்ற குளிப்புஇவையினால் தோல் நோய்கள் பரவுகின்றன.

கூடுதலான உணவைக் கேட்கும் கைதிகள் முழங்காலில் நிற்க வைக்கப்படுவர். பின்னர் அவர்கள் உதைக்கப்படுவர்; அடிக்கப்படுவர். இதுவும் காணாது என்று முள்கம்பி வேலிக்கூடாக இழுத்து எடுக்கப்படுவர். இதனால் கைதிகளின் உடம்பில் முள்கம்பி கீறி இரத்தக் காயம் ஏற்படும்'—

—இப்படி அவர் சொன்னார்.

ஒரு டாக்டர், ஒரு பொது சுகாதார பரிசோதகர் ஆகியோர் ஒழுங்காக முகாமில் உள்ள வைத்திய வார்ட்டைப் பார்க்க நியமிக்கப்பட்டுள்ளனர்.

சில கைதிகளின் படி இவர்கள் இரண்டுபேரும் நிர்வாக அலுவலகத்துக்கு வந்து இருந்து விட்டு திரும்பிச் சென்று விடுவர். நோயாளரான கைதிகளைப் பார்வையிடுவதில்லை.

இராணுவத் தாதிகள் தான் வைத்திய வார்ட்டில் பணியாற்றுகின்றனர். வைத்திய சேவை வரையறுக்கப்பட்டுள்ளது. மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

ஆஸ்பிரின், தோல் வியாதிகளுக்கான கிரீம்கள் மட்டுமே முகாம் வைத்திய பிரிவில் உள்ளன.

இன்னொரு முன்னாள் கைதி கூறுகின்றார்:–

'ஆரம்பத்தில் நண்பர்கள், உறவினர்கள்மூலம் தேவையான மருந்துகள் குளிசைகளை வாங்க கைதிகள் அனுமதிக்கப்பட்டனர். இந்தச் சலுகை பின்னர் ரத்துச்செய்யப்பட்டது'.

போதுமான வைத்திய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சமய சந்திகளில்

## பொது மக்கள் இணைந்து அபிஷேகம்

கொடிகாமம், ஜூலை6

கொடிகாமம் மத்திய சந்தை அருள்மிகு காளி தேவி கோயிலில் எதிர்வரும் புதன்கிழமை சமாதானம் வேண்டி பொதுமக்கள் இணைந்த ஊரபிஷேகம் நடத்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (உ–75



## பொய்யாமொழி

**குறள்:**

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.

**பொருள்:**

ஆழமுள்ள நீரில் முதலை மற்ற உயிர்களை வெல்லும்; ஆனால், நீரிலிருந்து நீங்கினால் அந்த முதலையையும் மற்ற உயிர்கள் வென்று விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Royal Institute Manipay

விலங்கியல்

A/L 1988/89

மீண்டும்

Mr. நாகநாதன்

செவ்வாய், வியாழன்
பி. ப. 5-00 மணி

உதயன்

06-07-1987 திங்கட்கிழமை

1988 — 1989 A/L Com.
3ஆவது புதிய பிரிவுகள்
நடைபெறுகின்றன

வரதராஜன், தேவா. வன்னியசிங்கம்
சுப்பிரமணியம், கேசவன், இராஜேந்திரா
அருள்நங்கை

றோயல் இன்ஸ்ரிரியூட்
மானிப்பாய்.

# பலாலி - பருத்தித்துறை தொலைத்தொடர்புவசதி

வடமராட்சி, ஜூலை 6

பலாலி-பருத்தித்துறை தொலைபேசித்தொடர்பு வசதிகள் கடந்த சனிக்கிழமையில் இருந்து மீண்டும் ஆரம்பித்துள்ளன.

சில ஆண்டுகளாக தொலைத் தொடர்பு வசதிகள் பாதிக்கப்பட்டிருந்தன.

சனிக்கிழமை காலை பத்து மணியளவில் வயாவிளான் முகாம் லெப்டினன்ட் கேர்ணலினால் தொலைத் தொடர்பு சேவை மீண்டும் தொடக்கி வைக்கப்பட்டது.

உதவி அரச அதிபர் பணிமனைகள், வைத்திய சாலைகள், பாடசாலை இராணுவ முகாம்களுக்குத் தொலைத் தொடர்புகள் வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டது. (உ-எ-160)

# மாணவர் கைதானல் பெற்ரோருக்குத் தகவல்

## பிரிகேடியர் அளிக்கும் உறுதி

வடமராட்சி, ஜூலை 6

மாணவர்கள் கைது செய்யப்பட மாட்டார்கள் என்பதற்கு என்னால் எந்தவித உத்தரவாதமும் அளிக்க முடியாது. ஆனால் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும்போதோ, பாடசாலையில் வைத்தோ கைது செய்யப்பட மாட்டார்கள் என உறுதியளிக்கின்றேன்.

மாணவர்கள் யாரேனும் கைது செய்யப்பட்டால் அது பற்றி உதவி அரச அதிபர்களூடாக பெற்ரோருக்கு அறிவிக்கப்படும்.

– இவ்வாறு பிரிகேடியர் ரூபசிங்க கூறினார்.

கடந்த சனிக்கிழமை வடமராட்சியை சேர்ந்த பெற்ரோர், ஆசிரியர், கல்வி அதிகாரிகள், உதவி அரசாங்க அதிபர்கள், இராணுவ உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்று புற்றளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

மாணவர்கள் கைது செய்யப்பட்டால் 48 மணித்தியாலங்களுக்கு வடமராட்சி மந்திகை மத்திய சிவில் நிர்வாக இராணுவ முகாமில் வைக்கப்படுவர்.

பெற்ரோர்களுக்கு அறிவிக்கப்பட்ட பின்னரே மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பாது விடுவதாலும், கல்வியை வளம்படச் செய்யாது விடுவதாலும் மேலும் ஒரு 'ஒப்பறேஷன் லிபறேஷன்' நடக்க ஏதுவாகும்.

மாணவர்களை பயங்கரவாதத்திலிருந்து திசை திருப்ப கல்வி மூலமே முடியும் என நம்புகிறேன்.

– இப்படி அவர் மேலும் கூறினார். (உ-ள-160)

# இராணுவ அத்துமீறல்:

## நடவடிக்கை எடுக்கமுடியாத நிலைக்கு மக்களே காரணமாம்

வடமராட்சி, ஜூலை 6

புகாரைக் கொடுப்பவர் விசாரணைக்கு வராமல் இருப்பதால்தான் இராணுவ அத்துமீறல் முறைப்பாடுகள் குறித்து சரியான நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது.

— இப்படி வடமராட்சி சிவில் பொறுப்பதிகாரி பிரிகேடியர் ரூபசிங்கா தெரிவித்தார்.

சில இடங்களில் இடம்பெற்ற இராணுவ அத்துமீறல்கள் பற்றி ஊர்ப் பிரமுகர்கள் சிலர் பிரிகேடியர் ரூபசிங்காவின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

அப்போதே பிரிகேடியர் ரூபசிங்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

எமது சிப்பாய்கள் எல்லாரையும் உத்தமர்கள் என்று நான் கூறவில்லை.

தவறாக நடக்கும் சிப்பாய்களை விசாரணைக்கு உட்படுத்துவதன் மூலமே நாம் தண்டிக்க முடியும்,

பொதுமக்களின் ஒத்துழைப்பு பெருமளவில் இதற்குத் தேவைப்படுகிறது.

பொதுமக்கள் ஒத்துழைக்கத் தவறுவதால்தான் தவறுகள் தொடர்ந்து இடம்பெறும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

— இப்படி பிரிகேடியர் சொன்னார்.

# நெல்லியடி ம. வி. இடம் மாறுகின்றது

வடமராட்சி, ஜூலை 6

யாக்கரை மகாவித்தியாலயம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகியன இடம் மாறுகின்றன.

வடமராட்சியில் உயர் வகுப்புக்களைக் கொண்ட கல்வி ஸ்தாபனங்களாக இவை விளங்குகின்றன.

இவற்றை இடம்மாற்றம் செய்யும் பொறுப்பை அப்பகுதிக் கல்வி அதிகாரியிடம் ஒப்படைத்திருப்பதாக வடமராட்சி சிவில் நிர்வாக அதிகாரி பிரிகேடியர் ரூபசிங்கா தெரிவித்தார்.

மேற்படி இரு பாடசாலைகளையும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, புனித இருதய கல்லூரி ஆகியவற்றில் இயங்கச் செய்யும்படி பணிக்கப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ-160)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 06-07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Monday July 06, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

# காலம் கடத்துவதிலேயே இலங்கை அரசு கவனம்

## கம்யூனிஸ்ட் வைத்திலிங்கம் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 6

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதை விடுத்து காலம் கடத்துவதிலேயே இலங்கை அரசு கவனம் செலுத்துகிறது. அவ்வப்போது இந்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு தற்காலிக தீர்மானங்களை காத்திரமின்றி எடுக்கின்றது.

—இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த உறுப்பினரான திரு. அ. வைத்திலிங்கம் கூறினார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 44 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நேற்று நடத்தப்பட்ட பொதுக் கூட்டம் யாழ் மாவட்டக் கட்சிக் கிளை நிலையத்தில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே வைத்திலிங்கம் இவ்வாறு கூறினார்.

யாழ் மாவட்டக் குழுவின் பதில் செயலாளர் திரு. க. நவரத்தினம் தமது தலைமை உரையில்—

''ஆயுதம் மட்டும்தான் விடுதலைக்கானவழி என்று மார்க்ஸிசம் சொல்லவில்லை. இன்று மார்க்ஸிசம் குண்டுகளுடன் சம்பந்தப் படுத்தப்பட்டு கொச்சைப்படுத்தப்படுகிறது.

கியூபா, கிரேக்கம், வியட்நாம் நாடுகளில் நடைபெற்ற புரட்சிகளுடன் எமது நாட்டுப் புரட்சியையும் கலக்கின்றனர். எமது நாட்டிற்கும் அந்நாடுகளுக்கும் இடையில் பல பூகோள, சமூக வேறுபாடுகள் உள்ளதை இவர்கள் ஏனோ மறந்துவிடுகிறார்கள்' என்றார்.

திரு. க. திருநாவுக்கரசு உரையாற்றுகையில்—

''ரஷ்ய நாட்டில் பல இனங்கள் ஒற்றுமையாக வாழும் போது நமது நாட்டில் மட்டும் இனங்களுக்கிடையில் ஒற்றுமையான ஒரு தீர்வை ஏன் எதிர்நோக்க முடியாது'' என்று கேள்வி எழுப்பினார்.

திரு. ஐ. சாந்தன் நன்றியுரை வழங்கினர். (உ-ள)

# எல்லைக் காந்தி உடல் நிலை மோசமடைகிறது

91 வயதான எல்லைக் காந்தி கான் அப்துல் கபார் கானின் உடல் நிலை மோசமாக இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

புதுடில்லி அரசு மருத்துவ மனையில் எல்லைக் காந்தி தற்போது அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்

திடீரென்று பக்கவாத நோயினால் பீடிக்கப்பட்ட நிலையில் எல்லைக் காந்தி கடந்த சனிக்கிழமை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

# ஈரான் ஏவுகணை பொருத்தியது

தெஹ்ரான், ஜூலை 5

வளைகுடாவில் சீன தயாரிப்பான ஏவுகணைகளைப் பொருத்தும் வேலைகளை ஈரான் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்தது.

வளைகுடாவில் அமெரிக்க யுத்தக்கப்பல்களின் பலம் அதிகரிக்கப்படுவதைத் தொடர்ந்து இந்த ஏவுகணைகளை ஈரான் பொருத்துகின்றது. (உ-எ)

# வேட்பாளர் கடத்தப்பட்டார்

கொழும்பு, ஜூலை 6

புத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட சுயேச்சையாக நியமனப் பத்திரம் தாக்கல் செய்த வேட்பாளர் ஒருவர் கடத்தப்பட்டார்.

இனந் தெரியாத நபர்கள் கோஷ்டி ஒன்று அந்த வேட்பாளரைக் கடத்திச் சென்றதாகப் பொலீஸுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (இ-எ)

# இந்தியாவினல் ஸ்ரீலங்காவிற்கு இருள் சூழ்ந்த எதிர்காலம்

## பேராசிரியர் புல்ஜின்ஸ் கூறும் உண்மைகள்

கொழும்பு, ஜூலை 6

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் தீவிர மாற்றம் ஏற்பட வேண்டும். இல்லையேல் ஸ்ரீலங்கா இருள் சூழ்ந்த காலத்தைத்தான் எதிர்நோக்க வேண்டும்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் தீவிரமாற்றம் ஏற்படும் என்பது மிகவும் சந்தேகமே.

– இப்படி பேராசிரியர் ரால்ப் புல்ஜின்ஸ் சொன்னார்.

ஸ்ரீலங்கா – இந்திய நெருக்கடி என்ற தலைப்பில் பேராசிரியர் ரால்ப் புல்ஜின்ஸ் கொழும்பு ராமடா ரினைஸன்ஸ் ஹோட்டலில் நடந்த ரோட்டரிக் கருத்தரங்கில் பேசினர்.

அப்போதே அவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

இனப்பிரச்சினையில் இந்தியா மத்தியஸ்தர் அல்ல.

முழுப்பிரச்சினையிலும் இந்தியாவும் ஒரு பங்காளராக மாறிவிட்டது. தீவிரவாதிகளிலும் பார்க்க ஸ்ரீலங்காவுக்குத்தான் இது முக்கியமானது.

### முட்டாள் தனமான செயல்

இந்தியாவின் வலிமையை ஸ்ரீலங்காவினல் சமாளிக்க முடியும் என்று நினைப்பது முட்டாள்தனமானது.

எமக்கு இந்தியா எத்தனையோ விதமான வேலைகளைச் சய்ய முடியும். எம்மால் இந்தியாவுக்கு எதிராக அவ்வளவாக இயங்க முடியாது.

உணவுப்பொதிகளுக்குத் துணையாக வந்த 'மிக்' சண்டை விமானங்களை நாம் எதிர்த்து இருந்தால் இலங்கையர்கள் சொந்த மண்ணிலேயே கொல்லப்பட்டிருப்பர்.

இராணுவ பலம் இல்லாத ஸ்ரீலங்கா ராஜதந்திரத்தைப் பாவிக்க வேண்டும். ராஜதந்திரத் துறையில் எமது வேகம் காணது.

ஸ்ரீலங்காவுக்கு சீன உதவி செய்வது பற்றி பத்திரிகைகள் பெரிதுபடுத்தியுள்ளன. ஸ்ரீலங்காவுடன் சீன அன்பு பாராட்டலாம். ஸ்ரீலங்காவுக்கு ஆதரவாக சில வரி அனுதாபத்தைத் தெரிவிக்கலாமே ஒழிய சீனவினல் வேறு ஒன்றும் செய்யமுடியாது.

எதிரிகளை உருவாக்கிய செயலுக்கு ஸ்ரீலங்கா தன்னைத்தானே நொந்து கொள்ளவேண்டும்.

இந்தியாவில் ஒரு கோடிக்கு அதிகமான பௌத்தர்கள் உள்ளனா.

அரந்தலாவை பௌத்த பிக்குகள் படுகொலை, அனுராதபுரம் மகாபோதி விகாரைப் படுகொலை ஆகியன குறித்து இந்தியப் பௌத்தர்கள் குரல் எழுப்பினார்களா?

இந்திய—ஸ்ரீலங்கா நட்புறவுச் சங்கங்கள் எம் மத்தியில் இல்லை. மனிதநேய உறவுகளை ஸ்ரீலங்கா வளர்த்துக் கொள்ளவில்லை; அதனை புறக்கணித்தே வந்துள்ளது.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை அதன் உள்நாட்டு அரசியலுடன் இணைத்துப் பார்த்து விளங்கிக் கொள்ளவேண்டும்.

இந்தியாவின் உள்நாட்டு அரசியல் குழம்பிய, நிச்சயமற்ற, இருண்ட நிலையில் உள்ளது. அரசியலில் அனுபவமற்ற புதியவர்கள் நுழைந்ததினல் இந்த நிலை ஏற்பட்டது.

வெளியுறவுக் கொள்கையில் தனது செயற் கட்டுப்பாட்டை இழந்த ஒரே ஒரு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியே.

இதற்குமேலாக இந்திய அரசியல் திடீர் திடீரென்றுமாறிக் கொண்டிருக்கின்றது.

மாநில அரசுகள் சக்தி வாய்ந்தவையாக மாறி வருகின்றன. மத்திய அரசின் கட்டுப்பாட்டில் எல்லைப்புற மாநில அரசுகள் இல்லை.

குறைந்த விளக்கம் கொண்ட புதிய கொள்கை வகுப்பாளர்கள் அரசியலுக்கு வந்துள்ளனர்.

ஸ்ரீலங்காவுக்கு தற்போதைய இந்திய அரசு நாசகரமானதாக இருப்பின் எதிர்கால அரசாங்கம் பேராபத்தானதாகவே வந்து முடியும்.

எனவே ஸ்ரீலங்கா அவதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

—இப்படி பேராசிரியர் ரால்ப் புல்ஜின்ஸ் சொன்னார். (உ-எ)

# இந்தியாவுடன் . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்திருக்கலாம்.

விமானமூலம் உணவுப் பொதிகளைப் போடவிட்டதனல் எமது பாதுகாப்புத் துறையின் பலவீனம் வெளியாகிவிட்டது.

பிரதேச சுதந்திரம், இறைமை ஆகியவற்றை எப்படியும் பாதுகாப்போம் என்று கூறுவதற்கு முன்னர் கப்பல்களை அனுமதித்திருக்கலாம்.

இப்பிரச்சினையை இன்னொரு கோணத்திலும் பார்க்கவேண்டும். யாழ்குடா நாட்டுக்கு இந்தியாவும் உணவுப்பொருள்களைக் கொண்டு வந்து விநியோகிக்கின்றது.

ஸ்ரீலங்கா அரசும் உணவுப் பொருள்களை யாழ் கொண்டு போய் வழங்கி வருகின்றது. நல்ல காரியம்தான்.

ஆனல் தீவிரவாதிகளின் தாக்குதலுக்காளாகி அகதிகளாக உள்ள சிங்கள மக்களை இருதரப்பினரும் மறந்து விட்டனரே.

கேள்வி: ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட இந்தியா ஒரு பக்கத்தில் இருக்கும்போது அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையை ஸ்ரீலங்கா தொடர்ந்து கடைப்பிடிக்க முடியுமா?

ஸ்ரீமாவோ; அணிசேரா இயக்கத்தில் இருப்பதுதான் எமக்கு உதவும்.

எப்படி இருப்பினும் எந்த நாடும் எம்முடன் பாதுகாப்பு உடன்படிக்கையை ஏற்படுத்தாது.

கிழக்கு-மேற்கு பாகிஸ்தான் யுத்தத்தின்போது சியட்டோ அமைப்பில் பாகிஸ்தான் இருந்தும் அந்த அமைப்பு நாடுகள் பாகிஸ்தானுக்கு உதவவில்லை. முன்னாள் பிரதமர் பூட்டோவே என்னிடம் இதுபற்றிச் சொன்னார். சிறிய நாடுடன் பெரிய நாடு பாதுகாப்பு உடன்படிக்கை வைத்தாலும் நெருக்கடிக் காலகட்டத்தில் பெரிய நாடு உதவிக்கு வராது.

யு. என். பி. அரசின் மோதல் கொள்கையினல்தான் இந்தியா ஆக்கிரமிப்பு நாடாக மாறி உள்ளது.

இது ஒன்றே போதும், யு. என். பி. அரசு பதவி விலகுவதற்கு.

கேள்வி: நீங்கள் கோருவது போல் பொதுத் தேர்தல் நடந்து, அதில் உங்கள் கட்சி வெற்றியீட்டி அரசு அமைத்தால் இனப்பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண்பீர்கள்?

ஸ்ரீமாவோ: இந்திய மத்தியஸ்தம் முக்கியமானது. இந்தியாவை மத்தியஸ்தராக இந்த அரசுதான் அழைத்தது.

எல்லாவற்றுக்கு முன்னர் இந்தியாவுடன் நல்லுறவை நாம்வளர்க்க வேண்டும்.

பேச்சுக்களை தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லது பிரபாகரனுடன் மட்டும் வைக்கக் கூடாது. எல்லாத் தமிழர் அமைப்புக்களுடனும் பேசவேண்டும்.

பிரபாகரனுடன் பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்று அரசு எண்ணினல் முதலில் தமிழர்கள் பிரபாகரனை தலைவராக ஏற்கவேண்டும். தமிழர் மத்தியில் சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் இதைச் செய்ய முடியும்.

தெரிவு செய்யப்பட்ட தமிழர் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும். இன்று அரசாங்கம் அதைத்தான் செய்ய எண்ணுகின்றது. நெடுகிலும் நாம் இதையே கூறிவருகின்ரோம். எமது பாதைக்கு அரசு வந்துள்ளது மகிழ்ச்சியாக உள்ளது.

கேள்வி: யு. என். பி. வழங்கவுள்ள கூடுதலான சுயாட்சியிலும் பார்க்க சுதந்திரக் கட்சி வழங்க உள்ள குறைந்த அளவு சுயாட்சி தமிழருக்கு ஏற்பானதாக இருக்கும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா?

ஸ்ரீமாவோ: இந்த அரசாங்கத்தை தமிழர் அமைப்புக்கள் நம்ப மறுக்கின்றன. இதுதான் அடிப்படைப் பிரச்சினை.

யு. என். பி. அரசு பதவியில் இருக்கும்வரை தான் தமிழரின் கோரிக்கைகளும் கூடுதலானவையாக உள்ளன. எந்த உடன்பாட்டையும் இந்த அரசு கௌரவிக்கும் என்று தமிழர் எதிர்பார்க்கவில்லை.

புதிய அரசு, புதிய அணுகு முறை காரணமாக தமிழரின் நோக்கங்களும் மாறுபட முடியும்.

அவர்கள் தங்கள் கோரிக்கைகளில் விட்டுக்கொடுக்காமல் இருப்பின் நியாயமான முறையில் நடக்கும்படி நாம் அவர்களைத் தூண்டுவோம்.

கேள்வி; பொதுத் தேர்தல் கோரிக்கையை முன்வைத்து ஆறு கட்சிக் கூட்டணித் தலைவர்கள், தங்களை அரசு கைது செய்யக்கூடிய போராட்டங்களில் ஈடுபடுவார்களா?

ஸ்ரீமாவோ: அவசியம் ஏற்பட்டால் அப்படிச் செய்வோம். அரசுக்குப் பயந்து நாம் பிரசார இயக்கத்தை நடத்தாமல் இருக்க முடியாது.

கேள்வி: பொதுத் தேர்தல் வேண்டும் என்ற போராட்டம் நாட்டை மேலும் பலவீனப்படுத்தாதா?

ஸ்ரீமாவோ: இன்றைய குளறுபடியில் இருந்து நாட்டைக் காப்பாற்ற யு. என் பி. அரசு தோற்கடிக்கப்படவேண்டும்.

கேள்வி; 'பொதுத் தேர்தல் வேண்டும்' இயக்கத்தை நடத்தும் முன்னர் எதிர்க்கட்சி எம். பிக்கள் பதவிதுறக்க வேண்டும் என்று லங்கா சமசமாஜக் கட்சி கூறுகின்றதே!

ஸ்ரீமாவோ: அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் இப்போது பிரதிநிதித்துவம் கிடையாது. ஆகவேதான் லங்கா சமசமாஜக் கட்சி இப்படிச் சொல்கிறது. அவர்கள் சொல்வது போல் நாம் நடக்க முடியாது.

கேள்வி: ஆறு கட்சிக் கூட்டணி, பொதுத் தேர்தலிலும் போட்டியிடுமா?

ஸ்ரீமாவோ: இதற்கு இப்போது பதில் சொல்ல முடியாது. தற்போதைய தேர்தல் முறையின் கீழ் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள முடியாது. (இ-எ)

# பிரான்ஸ் - - -

(1-ஆம்பக்கத்தொடர்ச்சி)

என்றும் கொழும்பு அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டுத் திரும்பிச் செல்கையில் அமைச்சர் ஜெரனிமோ மெல் சென்ற காருக்கு கல் வீசப்பட்டதாம். (உ-எ)

# வீடுகளை . . .

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

வாறு அனுமதி வழங்குவதை இராணுவத்தினர் குறைத்துள்ளதால் பொதுமக்கள் அங்கு சென்று ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

நேற்று தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற ஏராளமான பொதுமக்களை இராணுவத்தினர் திருப்பி அனுப்பினர்.

அப்பகுதியில் ஷெல் தாக்குதலும் இடம் பெற்றதால் மக்கள் பீதியுடன் திரும்பினர்(இ-68)

# சுகாதார...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

பராமரிப்பு இன்மையால் கைதிகள் இறந்துள்ளனர் என்று வேறு சில கைதிகளின் வாக்குமூலங்கள் கூறுகின்றன.

வயிற்றுப் போக்கு, நெஞ்சுநோவு நோய்களால் கைதிகள் முகாமில் இறந்திருக்கின்றனர் என்கிறார் வேறு ஒரு கைதி.

'பார்க்க வரும் உறவினர்களுக்கு இறந்தவர்களின் அஸ்திதான் கை அளிக்கப்படுகின்றது' — என்றும் அவர் சொன்னார்.

கடுமையான நோயினால் பீடிக்கப்பட்ட கைதிகள் காலி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இப்படி அனுப்பப்படுபவர்களில் பெரும்பாலோர் புதிதாகக் கொண்டுவரப்பட்ட கைதிகள்.

வடக்கு, கிழக்கு இராணுவ முகாம்களில் வைத்துவிசாரிக்கப்பட்டபோது ஏற்பட்ட காயங்களுடன்தான் அவர்கள் கொண்டுவரப்படுகின்றனர். (வளரும்)

# பாடசாலைகளில்...,

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

க்கு திருப்தியைத்தந்ததும் பாடசாலைகளை உரியவர்களிடம் ஒப்படைத்துவிட்டு விலகிக் கொள்வோம்.

—இவ்வாறு ரூபசிங்கா கூறினார். (உ.ள-160)

# ஈழத்தமிழர்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டன் வந்ததாக மூவரும் தெரிவித்தனர்.

இவர்களின் பிணை மனுவை நிராகரித்த நீதிபதி—

போராளி யார்?, பயங்கரவாதி யார்? என்பதை நீதிமன்றம் தீர்மானிக்க முடியாது.

இவர்களின் விண்ணப்பங்கள் உள்நாட்டமைச்சினல் பரிசிலனை செய்யப்பட்டு வருகின்றன. ஆகவே பிணை மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றன— என்று தெரிவித்தார். (உ-எ)

# 43 தமிழர் . .

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

கப்பட்டனர்.

இவர்களில் 22 பேர் பெண்கள்.

இவர்களது கடவுச்சீட்டுகளும், விஸாவும் போலியானவை என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் தடுத்து வைக்கப்பட்டனர்.

இரகசியப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org